செய்தி வெளியீடு எண் : 467 நாள்: 25.03.2022

<u>செய்தி வெளியீடு</u>

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் மாணவர்களுக்கு ரூ.42.30 இலட்சம் கல்வி உதவித் தொகை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் மாணவர்களுக்கு எச்.டி.எப்.சி வங்கியின் சி.எஸ்.ஆர் நிதியிலிருந்து, 141 மாணவர்களுக்கு ரூ.42.30 இலட்சம் கல்வி உதவித் தொகையினை சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகரில் இன்று (25.03.2022) நடைபெற்ற விழாவில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது, H.D.F.C. வங்கியின் சி.எஸ்.ஆர் நிதியின் மூலம் இன்று 141 மாணவர்களுக்கு தலா ரூ.30,000 வீதம் மொத்தம் ரூ.42.30 இலட்சம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வாரியத்தின் சார்பில் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்த நல்ல நிகழ்ச்சிக்கு உதவிய H.D.F.C. வங்கிக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதி உதவி கண்ணகி நகர் திட்டப்பகுதியிலிருந்து 60 மாணவர்களும், பெரும்பாக்கம் திட்டப்பகுதியிலிருந்து 53 மாணவர்களும், செம்மஞ்சேரி திட்டப்பகுதியிலிருந்து 11 மாணவர்களும், எழில் நகர் திட்டப்பகுதியிலிருந்து 13 மாணவர்களும், கூடப்பாக்கம் திட்டப்பகுதியிலிருந்து 3 மாணவர்களும், கே.பி. பார்க் திட்டப்பகுதியிலிருந்து 1 மாணவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி உதவியை பெறும் டாக்டர் சங்கவி, பொறியியல் படித்து முடித்து தற்போது வழக்கறிஞர் பட்டம் பயிலும் செல்வி.ரம்யா ஆகியோருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கல்விக்கு அதிகம் முக்கியத்துவம் அளிப்பவர். 2022–23 ஆம் நிதியாண்டில் கல்வித் துறைக்கு ரூ.36,896 கோடி ஒதுக்கிய ஒரே முதல்வர் நம் முதல்வர் தான். அதிகப்படியான மாணவர் சேர்க்கையால் வகுப்பறை பற்றாக்குறைகள் ஏற்படுவதை தவிர்க்க இந்நிதியாண்டில் 18,000 வகுப்பறைகள் கட்ட உத்தரவிட்டுள்ளார். பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களை கல்வியில் ஊக்குவித்து சமுதாயத்தின் மேல்நிலைக்கு கொண்டு வருவதே மாண்புமிகு முதல்வர் அவர்களின் இலட்சியம். இதற்கு உறுதுணையாக வாரியத்தின் சார்பில் 10,000 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க 14 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டதில், 37 பிரிவுகளின் கீழ் பயிற்சிகள் பெற 2,789 இளைஞர்கள் பதிவு

செய்துள்ளனர். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் 986 இளைஞர்களுக்கும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார திட்டத்தின் மூலம் 3,000 இளைஞர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம்மிக விரைவில் இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கப்படும்.

வாரியத்தின் மூலம் கூவம் நதி சீரமைப்பு திட்டத்தின் கீழ் 63 நபர்களுக்கு சிறு தொழில் உபகரணங்கள் ரூ.13.76 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு உள்ளது. தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மாலைநேர வகுப்புகள் நடத்தப்படுகிறது. இதில் கண்ணகி நகரில் 240 மாணவர்களும், பெரும்பாக்கத்தில் 980 மாணவர்களும், செம்மஞ்சேரில் 450 மாணவர்களும், ஆல் இண்டியா ரேடியோ திட்டப்பகுதியில் 80 மாணவர்களும் கல்வி பயில்கின்றனர்.

23.10.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் ஆய்வின் போது கண்ணகி நகர், எழில் நகர் மற்றும் சுனாமி குடியிருப்பில் உள்ள பொது மக்களால் கூடுதல் குடிநீர் வழங்க கோரிக்கை வைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்படி, 6,000 குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்டு வந்த 10 இலட்சம் லிட்டர் குடிநீருடன், கூடுதலாக 10 இலட்சம் லிட்டர் குடிநீராக உயர்த்தி மொத்தம் 20 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. கூடுதல் குடிநீர் வழங்கப்படுவதால், 7 நாட்களுக்கு ஒரு முறை என்பது குறைக்கப்பட்டு, 3 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்படுகிறது.

குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், புதிதாக குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்திற்கு ரூ.1.39 கோடி, மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்ட மூன்றே நாட்களில் வாரியத்தால் செலுத்தப்பட்டது. இப்பணிகள் ஒரு மாதத்தில் முடிக்கப்பட்டு, 23,000 குடியிருப்புகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 48 இலட்சம் லிட்டர் குடிநீர், தினசரி 55 இலட்சம் லிட்டர் குடிநீராக உயர்த்தி வழங்கப்படும்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, 30 படுக்கை வசதிகள் கொண்ட கண்ணகி நகரில் உள்ள மாநகராட்சி மருத்துவமனை உரிய மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, பகுதி நேர மருத்துவமனையாக இருந்தது, 24 மணி நேர மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு உள்ளது.

குடியிருப்பு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள "நம் குடியிருப்பு நம் பொறுப்பு" திட்டம் கொண்டு வரப்பட்டு உள்ளது. குடியிருப்போர் நலச் சங்கங்களின் 50% பங்களிப்புடன், வாரியத்தின் 50% நிதியும் சேர்த்து, இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டத்திற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. 248 குடியிருப்பு நலச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு உள்ளது. சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் இக்குடியிருப்பு சங்கங்களை உருவாக்க பொது மக்களுடன் இணைந்து முனைப்புடன் செயல்பட வேண்டும்.

குடிசையில் வாழும் ஏழை எளிய மக்களின் சமூக நிலையை உயர்த்த 1970–ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது தான் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்பெயரை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என மாற்றியுள்ளார். வாரியத்தால் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடங்கள் கால மாற்றத்தால் வலிமை இழந்து, வாழத் தகுதியற்றதாக உள்ளது. சென்னையில் மட்டும் சுமார் 27,000 வீடுகள் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 7,500 வீடுகள் ரூ.1,200 கோடி மதிப்பில் நடப்பாண்டு கட்டப்பட உள்ளது. இப்பணி நாளை தொடங்கி வைக்கப்பட உள்ளது. இதில் குடியிருப்போருக்கு மறுகட்டுமான காலத்தில் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ8,000 தற்போது ரூ.24,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். வரும் நிதியாண்டான 2022–23ல் மேலும் 15,000 வீடுகள் மறுகட்டுமானம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, வரும் ஆண்டுகளில் பழைய கட்டிடங்கள் இடிக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டி அங்கு குடியிருப்போருக்கே வீடுகள் வழங்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்திட்டப் பகுதிகளை பொறுத்தமட்டில், கண்ணகி நகர், எழில் நகர் மற்றும் சுனாமி குடியிருப்புகளில் ரூ.12.87 கோடி மதிப்பில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் வாரியத்தால் 15 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடங்களின் பழுதுகளை நீக்கி புதுப்பொலிவு பெற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக 2021–2022 ஆம் நிதி ஆண்டில் 26,483 குடியிருப்புகளுக்கு ரூ.68.72 கோடி நிதி ஒதுக்கப்பட்டதில், கண்ணகி நகரில் 5504 குடியிருப்புகள் ரூ.19.69 கோடி மதிப்பீட்டிலும், எழில் நகரில் 8084 குடியிருப்புகள் ரூ.1.39 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது என தெரிவித்தார்.

இவ்விழாவில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ச.அரவிந்த்ரமேஷ், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. ம.கோவிந்தராவ், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திரு. ஏகாம்பரம், எச்.டி.எப்.சி (தமிழ்நாடு மற்றும் கேரளா) வங்கி தலைவர் திரு. குமார் சஞ்சீவ், மண்டல தலைவர் திரு.ரமேஷ் வங்குரி, திரு. ஆர்.சுரேஷ், வாரிய முதன்மை தலைமை சமுதாய வளர்ச்சி அலுவலர் திரு. ஜா. சம்பத், தலைமைப் பொறியாளர் திரு. இராம. மோகன், வாரிய மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in